2. தகவல் கோரல்

(அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் காவல் துறையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், பெரியகுளம் தொகுதி, கொடைக்கானல் மலைப் பகுதியில் நக்சலைட் தீவிரவாதிகளுக்கும் போலீசாருக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில்...

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்விலே இருக்கிறது. ரிப்போர்ட் கேட்டிருக்கிறார்கள். ரிப்போர்ட் வந்ததும் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: எப்போது எடுத்துக்கொள்வீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னாலே எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள்.

(ஆ) அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் வருவாய்த் துறைக்கு மாற்றம்

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைப்புசாரா கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உட்பட 14 நல வாரியங்களும் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட்டதால் தொழிலாளர்கள் மத்தியிலே மிகப் பெரிய பதட்டம் ஏற்பட்டிருக்கிறது. வருவாய்த் துறையிலிருந்து மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) அவற்றைத் தொழிலாளர் நலத் துறைக்கு மீண்டும் மாற்றிவிட்டீர்கள் என்றால் சரியாக இருக்கும். தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, அது பின்னாலே எடுத்துக்கொள்ளப்படும்.